OS 246/2022

பி.வா.சா. 1 துரைசாமி த/பெ கண்ண கவுண்டர்

நாள் 17.11.2025

**குறுக்கு விசாரணை**

1. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பத்திற்கு கீழ் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் எனக்கு படிக்க தெரியாது. மேற்படி கையொப்பத்தை எங்கு போட்டேன் என்றால் கொளத்தூரில் பத்திரம் எழுதும் நபரின் வீட்டில் வைத்து கையொப்பம் போட்டேன். மறுநாள் கண்ணமங்கலம் ரிஜிஸ்டர் ஆபிசிற்கு சென்றேன். ரிஜிஸ்டர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரித்தார். வா.சா.ஆ.1ல் இணைக்கப்பட்டுள்ள என் ஆதார் கார்டு நகலை நான் தான் கொடுத்தேன். யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் பணம் கொடுத்தவரின் மகன் தான் சாட்சி கையொப்பம் போட்டார். சுப்பிரமணி என்பவர் எனது சகலபாடி ஆவார். அவரது மகன் பெயர் பாலாஜி ஆகும். பத்திரம் எழுதும் போது பாலாஜி இருந்தாரா என்றால் எழுதும் போது இல்லை ரிஜிஸ்டர் ஆபிசிற்கு வந்தார். பணம் கொடுத்த நபர் சார்பாக எனது சகலை மகன் பாலாஜி கையொப்பம் செய்தார் எனது சார்பாக பணம் கொடுத்தவரின் மகன் கையொப்பம் செய்தார். வாதி ஜெயமணி எனக்கு நேரடியாக பழக்கம் என்றால் இல்லை பாலாஜி மூலம் தான் பழக்கம்.

2. எல்லா ஏற்பாடுகளும் பாலாஜி தான் செய்தார் என்றால் சரிதான். பாலாஜியை விசாரித்தால் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தமா அல்லது கடனுக்காக எழுதி கொடுத்ததா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். தாவா சொத்தை வாதிக்கு விற்பனை செய்ய ரூ.3 லட்சம் விலை பேசி முன்பணமாக ரூ.2,50,000/- பெற்றுக்கொண்டு வாதி பெயருக்கு 22.09.2017ம் தேதி கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தேன் என்றால் இல்லை நான் அடமானம் தான் போட்டேன். ரிஜிஸ்டர் என்னிடம் பணம் வாங்கிவிட்டீர்களா என்று கேட்டார் நான் வாங்கிவிட்டேன் என்று சொன்னேன். பத்திரம் எழுதிய அசோகன் பத்திரம் எழுதிய பிறகு எனக்கு படித்து காண்பித்தாரா என்றால் இல்லை. பாலாஜி படித்து பார்த்தாரா என்றால் இல்லை. இந்த பணத்தை வாங்கி தான் எனது மகனுக்கு கார் வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். எனது மகன் இறந்ததற்காக இழப்பீடு வழக்கை திருப்பத்தூரில் போட்டிருந்தேன் என்றால் சரிதான். நான் ரெட்டிபாளையத்தில் வசித்து வரும் நிலையில் திருப்பத்தூரில் இழப்பீட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் எனது மகன் இறந்தது திருப்பத்தூர் என்பதால் அங்கு தாக்கல் செய்தேன்.

3. விபத்து எனது மகனால் ஏற்பட்டது என்று இழப்பீடு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அடமானம் கடன் என்று சொல்லும் நிலையில் அடமானம் மீட்பதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் ரூ.1,30,000/- செலுத்திவிட்டேன். அதன் பிறகு என் மகன் இறந்துவிட்டதால் மேற்கொண்டு நடவடிக்கை இல்லை. நான் ரூ.1,30,000/- செலுத்தியதற்கு ஆதாரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை மாதம் மாதம் ரூ4 ஆயிரம் செலுத்தினேன். நான் சொல்வது போல் அடமானக்கடன் இல்லை என்றாலும் நான் மாதம் மாதம் தொகை எதுவும் செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். வழக்கு தாக்கல் செய்தவதற்கு முன்பு வாதி என்னிடம் கேட்டாரா என்றால் வட்டியை 6 மாதம் நான் செலுத்தவில்லை அதனால் கோர்ட்டிற்கு வந்துவிட்டார்.

4. எனது முதன்மை வாக்குமூலத்தில் நான் மாதம் மாதம் வட்டி கொடுத்ததாகவும் எனது மகன் இறந்துவிட்டதால் 6 மாதம் வட்டி கொடுக்கவில்லை என்று விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ளது என் கையொப்பம் தான். வா.சா.ஆ.2 அறிவிப்பை வாதி தரப்பில் சொத்தை கிரையம் செய்து கொடுக்கும் படி அனுப்பியதை வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புகை அட்டையின் மூலம் நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன் வாதி வழக்கு போட்டிருப்பதாகவும் நானும் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னார். தாவா படி வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.